**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.I, Mettur**
**Case No : C.C.242/2022**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 16.11.2023**

| | |
|---|---|
| **Name : பூபதி** | **Caste : MBC** |
| **Father's Name: கந்தசாமி** | **Calling : Cooly** |
| **Village : கரிக்காபட்டி** | **Religion : Hindu** |
| **Taluk : மேட்டூர்** | **Age : 32** |

**(Accused absent. Filed 317 Cr.P.C petition and allowed.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கள்ளிகாரன்வளைவில் குடியிருக்கிறேன். நான் தனியார் வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அம்மா. எனக்கு 2 வருடத்திற்கு முன்பு எனக்கு பூங்கொடி என்பவருடன் திருமணம் நடைபெற்றது. எனக்கும் என் மனைவிக்கம் கருத்து வேறுபாடு ஏற்பட்டு என் மனைவி அவரது பெற்றோர் வீட்டில் குடியிருந்து வருகிறார். 28.09.2021 ம் தேதி ஒடுவங்காய் விசச்செடியை குடும்பபிரச்சனை காரணமாக சாப்பிட்டு விட்டேன். நான் சிகிச்சைக்காக ஓமலுரில் உள்ள துளசி மருத்துமனையிலும் பின்பு எடப்பாடி அரசு மருத்துமனையிலும் சிகிச்சையில் இருந்தேன். என்னை விசாரிக்க வேண்டுமென்று ஜலகண்டாபுரம் காவல்நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். அதற்கு முன்பாக நங்கவள்ளி சேர்மன் பாலசுப்ரமணியம் என்பவர் என்னையும், எனது அம்மாவையும் பேச்சுவார்த்தைக்காக கூப்பிட்டார்கள். அதனால் நானும், என்னுடைய அம்மாவும் 04.10.2021 ம் தேதி மதியம் 12 முதல் 12.30 மணிக்கு பாலசுப்ரமணியம் வீட்டிற்கு சென்றோம். என்னையும் , எனது மனைவியையும் பஞ்சாயத்தார்கள் விசாரித்து கொண்டிருந்தார்கள். எனது தரப்பில் நானும், எனது அம்மாவும், ஊர் பெரியோர்களும் சென்றிருந்தோம். எனது மனைவி தரப்பில் கணேசன், சக்திவேல், வேலு, அலமேலு ஆகியோர் வந்திருந்தனர். அப்போது எதிரி சக்திவேல் எனது அம்மாவை கெட்டவார்த்தையால் திட்டி உன்னால் தான்

இவ்வளவு பிரச்சனையும் என்று சொல்லி, அங்கிருந்த கம்பியால் எனது அம்மாவின் தலையில் பின்புறம் அடித்தார். எதிரி கணேசன் எனது அம்மாவின் நெஞ்சின் மீது குத்தி அவர் அணிந்திருந்த ஜாக்கெட்டை கிழித்துவிட்டார். எதிரி வேலு எனது அம்மாவை காலால் எட்டி உதைத்து தலைமுடியை பிடித்து இழுத்தார். எதிரி அலமேலு எனது அம்மாவின் நெஞ்சின் மீது அமர்ந்து கையால் குத்திவிட்டார். எதிரிகள் அருகில் இருந்தோர் வருவதை பார்த்து சம்பவஇடத்தில் இருந்து எதிரிகள் அடிக்க பயன்படுத்திய கம்பியை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். போகும்போது எதிரிகள் அனைவரும் அ.சா.1 ஐ எங்கிருந்தாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டி சென்றார்கள். பிறகு, என் அம்மாவை எடப்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு வந்து சேர்த்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் இருந்தும் விசாரணை செய்யவில்லை.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**